Australian Government

COVID-19 VACCINATION

# 6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரைக்குமான வயதுள்ள சில குழந்தைகளுக்கு COVID-19 தடுப்பூசியேற்றம் சிபாரிசு செய்யப்படுகிறது

07 செப்டெம்பர் 2022

தீவிர நோயெதிர்ப்புத்-திறன் பாதிப்பு, இயலாமை, மற்றும் தீவிரமான COVID-19 ஏற்படுவதற்கான ஆபத்தினை அதிகப்படுத்தும் சிக்கலான மற்றும்/அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உடல்நல நிலைகள் உள்ள 6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரைக்குமான வயதுள்ள குழந்தைகளுக்கு ஆஸ்திரேலியாவின் நோயெதிர்ப்புத்-திறனேற்ற வல்லுநர்களான Australian Technical Advisory Group on Immunisation அமைப்பினர் COVID-19 தடுப்பூசியேற்றத்தினை சிபாரிசு செய்கின்றனர்.

பின்வரும் நிலைகள், அல்லது அவற்றைப் போன்ற நிலைகள் உள்ள குழந்தைகளை இது உள்ளடக்கும்:

- புற்றுநோய்ச் சிகிச்சையை மேற்கொண்டுவரும் குழந்தைகள் அல்லது நோயெதிர்ப்புத்-திறனை ஒடுக்கும் சிகிச்சைகளை மேற்கொண்டுவரும் குழந்தைகள் உள்ளடங்க, தீவிர ஆரம்ப-நிலை அல்லது இரண்டாம்-நிலை நோயெதிர்ப்புத்-திறன் குறைபாடு உள்ள குழந்தைகள்;
- எலும்பு மஜ்ஜை (bone marrow) அல்லது 'ஸ்டெம் செல்' (stem cell) மாற்று, அல்லது 'கைமேரிக் ஆண்ட்டிஜென் T -செல் (CAR-T) சிகிச்சை(chimeric antigen T -cell (CAR-T) therapy)-யை மேற்கொண்டுவரும் குழந்தைகள்
- பிறப்பிலிருந்தே இருக்கும் சிக்கலான இதய நோய் உள்ள குழந்தைகள்;

- சுவாசக் காற்றுப்-பாதையிலுள்ள முறைகேடுகள் அல்லது தீராத நுரையீரல் நோய் உள்ள குழந்தைகள்;
- ‘1-ஆம் வகை சர்க்கரை நோய் மெலட்டஸ்’ உள்ள குழந்தைகள்;
- தீராத நரம்பியல்-சார் அல்லது நரம்பு-தசையியல்-சார் நிலைகள் உள்ள குழந்தைகள்; அல்லது
- அன்றாட வாழ்க்கை அலுவல்களில் ஒத்தாசைகளை அடிக்கடித் தேவைப்படுத்தும் தீவிர ‘செரிப்ரல் பால்ஸி’ (cerebral palsy) எனப்படும் தசை ஒருங்கிணைப்புக் கோளாறு அல்லது ‘டௌன் சின்ட்ரம்’ (Down Syndrome (Trisomy 21)) எனப்படும் அறிவுத்திறன் வளர்ச்சிக் கோளாறு உள்ள குழந்தைகள்.

இந்தக் குழந்தைகளுக்கு COVID-19 காரணமாகத் தீவிர நோய்வாய்ப்படுவதற்கான அதிகரித்த ஆபத்து இருக்கும். COVID-19-இற்கு எதிரான தடுப்பூசியேற்றம் இந்த ஆபத்தினைக் குறைக்க உதவும்.

தகுதி பெறும் பிரிவினரில் பட்டியலிடப்படாத 6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரைக்குமான வயதுள்ள குழந்தைகளுக்கு COVID-19 காரணமாகத் தீவிர நோய்வாய்ப்படுவதற்கான ஆபத்து மிகக் குறைவாக இருக்கும். இந்த சமயத்தில் COVID-19 தடுப்பூசி ஒன்றைப் பெற அவர்களுக்கு சிபாரிசு **செய்யப்படவில்லை**.

## 6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரைக்குமான வயதுள்ள குழந்தைகள் எந்தத் தடுப்பூசியைப் பெறுவார்கள்?

8 வார கால இடைவெளியில் COVID-19 தடுப்பூசியின் 2 மருந்தளவுகளை இட்டுக்கொள்ளுமாறு 6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரைக்குமான வயதுள்ள தகுதிபெறும் குழந்தைகளுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது. நோயெதிர்ப்புத்-திறன் தீவிரமாகப் பாதிக்கப்பட்டுள்ள சில குழந்தைகளுக்கு 3 மருந்தளவுகள் தேவைப்படக்கூடும். இந்த வயது வீச்சில் உள்ள குழந்தைகளால் Spikevax (Moderna) தடுப்பூசியைப் பெற இயலும்.

## 5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பிள்ளைகள் எந்தத் தடுப்பூசிகளை இட்டுக்கொள்ள வேண்டும்?

5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்து பிள்ளைகளும் COVID-19 தடுப்பூசியை இப்போது இட்டுக்கொள்ளலாம்.

5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பிள்ளைகள் Moderna அல்லது Pfizer COVID-19 தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ளலாம். 8 வார கால இடைவெளியில் கொடுக்கப்படும் இரண்டு தடுப்பூசி மருந்தளவுகளை இட்டுக்கொள்ளுமாறு 5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய

பிள்ளைகளுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது. நோயெதிர்ப்புத் திறன் தீவிரமாகப் பாதிக்கப்பட்டுள்ள சில குழந்தைகளுக்கு 3 மருந்தளவுகள் தேவைப்படலாம்.

5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பிள்ளைகள் இரண்டு மருந்தளவுகளுக்கும் ஒரே வர்த்தகப் பெயரைக் கொண்ட தடுப்பூசியை இட்டுக்கொள்ளவேண்டும் என்று விரும்பப்படுகிறது.

### COVID-19 தடுப்பூசிகளும் மற்ற தடுப்பூசிகளும்

காய்ச்சல் போன்ற பக்க விளைவுகள் ஏற்படுவதற்கான ஆபத்தைக் குறைந்தபட்சமானதாக்க 6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரைக்குமான வயதுள்ள குழந்தைகள் அவர்களுடைய COVID-19 தடுப்பூசிக்கும் மற்ற தடுப்பூசிகளுக்கும் இடையே 7 முதல் 14 நாட்கள் வரை காத்திருக்க வேண்டுமென Australian Technical Advisory Group on Immunisation சிபாரிசு செய்கிறது. இருப்பினும், வெவ்வேறு நேரங்களில் தடுப்பூசிகளை இட்டுக்கொள்வதில் தொலைதூரப் பகுதிகளுக்கான தொலை-அடைவுத் திட்டங்களில் இருப்பதைப் போன்ற சிரமங்கள் இருக்குமானால், மற்ற தடுப்பூசிகளை இடும் அதே நேரத்தில் COVID-19 தடுப்பூசியும் கொடுக்கப்படலாம்.

### உங்களுடைய பிள்ளைக்கு COVID-19 இருந்தால்

COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட பிறகு COVID-19 தடுப்பூசி ஒன்றை உங்களுடைய பிள்ளை இட்டுக்கொள்வதற்கு முன்பாக அவர் 3 மாதங்களுக்குக் காத்திருக்கவேண்டும். தடுப்பூசி இட்டுக்கொள்வதற்கான தகுதி உங்கள் பிள்ளைக்கு இருந்தால், பட்டியலிடப்பட்டுள்ள அடுத்த COVID-19 தடுப்பூசியேற்றம் 3 மாதங்களுக்குப் பிறகு கூடிய விரைவில் கொடுக்கப்படவேண்டும். அவருக்காக சிபாரிசு செய்யப்படும் அனைத்து மருந்தளவுகளையும் உங்கள் பிள்ளை இப்போதும் இட்டுக்கொள்ளவேண்டும்.

### என் பிள்ளை தடுப்பூசி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு சந்திப்புவேளையை நான் எப்போது முன்பதிவு செய்யலாம்?

Vaccine Clinic Finder: https://covid-vaccine.healthdirect.gov.au/booking/ மூலமாக, இந்த வயதுக் குழுவிலுள்ள தகுதிபெறும் குழந்தைகளுக்கு இப்போது முன்பதிவுகள் துவங்கியுள்ளன.

தடுப்பூசியேற்றச் சேவை வழங்குநர்கள் புதிய சந்திப்புவேளைகளைத் தொடர்ந்து சேர்த்துக்கொண்டிருப்பார்கள் என்பதால், இந்த வலைத்தலப் பக்கத்தினைத் தவறாமல் சோதித்துவாருங்கள்.

## மேலதிகத் தகவல்கள்

மேலதிகத் தகவல்களுக்கு www.health.gov.au எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள், அல்லது 1800 020 080-இல் National Coronavirus Helpline-ஐ அழையுங்கள். இலவச மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு 'தெரிவு 8'-ஐ மேற்கொள்ளுங்கள்.